**முதன்மை சார்பு நீதிமன்றம் , கிருஷ்ணகிரி**

**OS.No:230/2018** **Start time:11.55AM**

**வா.சா.1 சுப்பிரமணி, த/பெ.சண்முகம்** **நாள்.25.08.2026**

சாட்சி முதன்மை விசாரணை தொடர்ச்சியாக குறுக்கு விசாரணைக்காக திரும்ப ஆஜர் செய்யப்பட்டு The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி **25.08.2026** நாளாகிய இன்று திருமதி.எம்.சரஸ்வதி, கிரேடு II பெஞ்சு கிளார்க் முதன்மை சார்பு நீதிமன்றம், நீதிபதி திரு.செ.சுரேஷ் குமார்,எம்.எஸ்.சி,எம்.எ,எம்.எல்., அவர்கள் முன்னிலையில் சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் நான் எழுத்துக்கூட்டி படிப்பேன். வாதி சத்தி எதுக்காக வழக்கு தாக்கல் செய்து உள்ளார் என்றால் சிவலிங்கம் வீட்டிற்கு மேல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். சிவலிங்கத்திற்கு 1990 ஆம் வருடம் அவருடைய தாய் வழி பாட்டி உயில் எழுதி வைத்ததாகவும் இதன் மூலம் வந்த வீடு சிவலிங்கத்திற்கு வந்தது என்றும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். அந்த உயிலை எழுதும் பொழுது நான் உடன் இருந்தேனா என்றால் உடனிருந்தேன்..

2. வாதி தாக்கல் செய்துள்ள சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண்.511 என்றும் தற்பொழுது பல உட்பிரிவுகளாக இந்த சர்வே எண் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உயில் சாசனத்தில் தாவா சொத்தான சர்வே எண்.511 பற்றி எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல எழுதப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் சர்வே எண்.511 குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை.

3. சர்வே எண்.401/29 இடத்திற்கு தான் உயில் எழுதப்பட்டுள்ளது என்றும் தாவா சொத்து சர்வே எண்ணான 511 பற்றி எந்த ஒரு குறிப்பு

எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து ஆதியம்மாளுக்கு எக்காலத்திலும் பாத்தியப்படவில்லை என்றும் அவருக்கு பாத்தியப்படாத சொத்தை உயில் மூலம் சிவலிங்கத்திற்கு எழுதிக் கொடுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தெரிந்து ஆதியம்மாள் அனுபவத்தில் இருந்து வந்தார்.

4. அவர் சொத்தான சர்வே எண்.511 இல் ஆதியம்மாள் எப்பொழுதும் அனுபவத்தில் இருந்ததில்லை என்றும் சர்வே எண்.401/29 சொத்தான அரசு புறம்போக்கு நிலத்தில் தான் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்று சொன்னால் வள்ளியம்மாள் வீட்டிற்கு கிழக்கே உள்ள இடத்தில் ஆதியம்மாள் குடியிருந்து வந்தார். எனக்கு அது அரசு புறம்போக்கு நிலமா என்றும் அதன் சர்வே எண் சரியாக தெரியாது.

5. தாவா சொத்து சையது முகமது சாயிபு வகையறாக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் எனக்கு தெரிந்த நாளிலிருந்து ஆதியம்மாள் தான் தன் அனுபவத்தில் வைத்திருந்தார். தாவா சொத்துக்கான பட்டா சையது முகமது சாயிபு வகையறாவின் பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சிவலிங்கம் வயைறா பெயரில் உள்ளது.

6. சிவலிங்கம் வகையறா பெயரில் உள்ள பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சிவலிங்கம் வகையறா பெயரில் தாவா சொத்தின் பட்டா வழங்கப்படவில்லை என்றும் பிரதிவாதி தரப்பில் சொல்லிக் கொடுத்தவாறு சிவலிங்க வகையறா பட்டா வைத்திருப்பதாகவும் அவர்கள் அனுபவத்தில் இருந்து வருவதாகவும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. சையது முகமது சாயிபு வகையறாவிடம் சிவலிங்கம் வேலை செய்து வந்தார் என்றும் முகமது சாயிபு வகையறாக்கு சொந்தமான சர்வே எண். 511 தோட்ட வேலை பார்த்து வந்தார் என்றும் சிவலிங்கத்திற்கு அந்த சொத்து பாத்தியம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. சிவலிங்கம் Work shop வைத்து நடத்தி வந்தார். நானும் அதில் வேலை பார்த்து வந்தேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சிவலிங்கம் Work shop வைத்ததாகவும் நான் அதில் வேலை செய்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

8. முகமது சாய்பு வகையறாக்கு சொந்தமான தென்னந்தோப்பில் ஒரு ஓரத்தில் சிவலிங்கம் அனுமதியின் பேரில் குடிசை போட்டு அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.511 இல் உள்ள

சொத்தை முகமது சாயிபு வகையறா வீட்டு மனைகளாக பிரித்து விற்று விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். இவ்வாறு வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்த பொழுது சிவலிங்கம் அந்த இடத்தில் போட்டிருந்த குடிசையை அகற்றி வெளியேறுமாறு முகமது சாயிபு வகையறா தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது என்றும் ஆனால் அவர் வெளியேற மறுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

9. தாவா சொத்து சையது முகமது சாயிபு வகையறாவுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் அவர்கள் அதை வாதி தரப்பினருக்கு விற்று விட்டார்கள் என்றும் வாதி அதை தன் அனுபவத்தில் வைத்து வருகிறார் என்றும் பிரதிவாதிகளுக்கும் சிவலிங்கத்திற்கும் எந்தவித சம்பந்தமும் தாவா சொத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது

End time:12.12PM

*Taken down by me in Open Court and Interpreted and read over to the Witness and acknowledged by him to be correct.*

SURESHKUMAR CHELLAM Digitally signed by SURESHKUMAR CHELLAM

***Principal Subordinate Judge, Krishnagiri.***